| O.S.No. 152/2024 | DW1: திரு. பரணிதரன்<br>த/பெ. திரு. கல்யாணவரதன் | 01-04-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வாதி ரவி எனது அண்ணன். 1, 2 பிரதிவாதிகள் என் அண்ணன்கள், 3 முதல் 5 மற்றும் 7 பிரதிவாதிகள் என் சகோதரிகள். வாதி வழக்கு சொத்தினை பாகப்பிரிவினை செய்து கொடுக்க வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என் தந்தைக்கு உரிமையான சொத்துக்கள் ஆகும். நான் தாக்கல் செய்து ஆவணங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து காலத்தில் என் வசம் இருந்தது என்றால் சரிதான். அந்த சமயம் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், Online-ல் சமர்ப்பித்து கிடைக்க தாமதமானதால் தாக்கல் செய்ய முடியவில்லை. மேற்படி ஆவணங்கள் என்வசம்தான் இருந்தது என்றாலும், அதனை தாக்கல் செய்தால் எனக்கு எதிர்மறையாக அமையும் என்பதால் அச்சமயம் தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல.

2. நான் எனது குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்ததால் எனது தகப்பனார் எனக்கு 19.02.1993-ல் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார். நான் சொல்லும் காரணம் பி.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு வாசகம் பி.சா.ஆ.1-ல் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1-ல் எனது ஜீவனத்திற்காக சொத்து கொடுக்கிறேன் என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.3-ல் என் தந்தை மோகனசுந்தரத்திற்கு ரூ.30,000/-க்கு 2 ரூபாய் வட்டி வீதம் அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தார்.

3. எனக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைப்பதற்கு முன்பாகவே பி.சா.ஆ.3 அடமான கடன் பத்திரம் ஏற்பட்டது. அந்த சமயம் சொத்து என் தந்தை பெயரில் இருந்தது. அந்த கடனை 26.06.1995-ல் நான் பைசல் செய்தேன். பி.சா.ஆ.3 ஆவணத்தின்படி கண்டுள்ள அடமான கடனை பி.சா.ஆ.2 கிரைய ஆவணப்படி நான் கிரையம் செய்து கொடுத்தேன். பி.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் என் தந்தை பெற்ற கடனுக்காக செட்டில்மென்ட் மூலம் எனக்கு கிடைக்கப்பெற்ற சொத்தினை கிரையம் செய்து கொடுக்கிறேன் என்று வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு எழுதவில்லை. பி.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் நான் பெற்ற கடனிற்காக சொத்தினை

கிரையம் செய்து கொடுப்பதாக வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளதே தவிர என் தந்தையின் கடனுக்காக சொத்தானது என்னால் விற்பனை செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. பி.சா.ஆ.12, பி.சா.ஆ.13 கிரைய ஆவணங்களுக்கும் வழக்கு சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சம்மந்தம் உண்டு. பி.சா.ஆ.12, பி.சா.ஆ.13 கிரைய ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் இந்த வழக்கில் வழக்கு சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.12, பி.சா.ஆ.13 ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தேவையில்லாதவை என்று சொன்னால் சரியல்ல.

5. எனது தந்தையினை கடைசி காலத்தில் நான்தான் பராமரிப்பு செய்து வந்தேன், மற்ற வாரிசுகள் யாரும் என் தந்தையை பராமரிக்கவில்லை. என் தந்தைக்கு உரிமையான சொத்துக்களை உயில் சாசனம் எழுத வேண்டும் என்று என் தந்தை என்னிடம் சொல்லி வந்தார் என்றால் இல்லை. அதுபற்றி யாரிடம் என் தந்தை சொல்லி வந்தார் என்று எனக்கு தெரியாது. உயில் எழுதிய காலகட்டத்தில் என் தந்தை என்னுடைய பராமரிப்பில்தான் இருந்து வந்தார். உயில் எழுதிய காலகட்டத்தில் என் தந்தை உடல்நலம் குன்றி இருந்தார் என்றால் அவர் ஆரோக்கியமாகவும், நல்ல மனநிலையோடும் இருந்தார். உயில் எழுதிய பிறகாவது என் தந்தை உயில் எழுதியது பற்றி என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. என் தந்தை இறந்தபிறகுதான் அவர் பராமரிக்கும் பெட்டியில் உயிலானது என்னால் எடுத்து பார்க்கப்பட்டது, அதன்பிறகுதான் அதைப்பற்றி எனக்கு தெரியவந்தது. பெட்டியில் உயில் எழுதி வைத்த விஷயம் மற்றவர்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

6. என் தந்தை 04.08.2007-ல் இறந்தார். காரியத்திற்கு முன்னரே என் தந்தை உயில் எழுதி வைத்த விஷயம் பெட்டியை திறந்து பார்க்கையில் தெரியவந்தது. அந்த சமயத்தில் அசல் உயில் ஆவணம் இருந்தது. அந்த அசல் உயில் ஆவணத்தினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏன் அசல் உயில் ஆவணத்தினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சான்று நகல் இருந்ததால் அசலை தாக்கல் செய்யவில்லை. அசல் உயில் சாசனத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். காரியத்தின்போது உயில் சாசனம் மற்றும் என் தந்தை கடன் வாங்கியது குறித்து குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிந்து

விவாதித்தோம். உயில் பற்றிய விவரம் வாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

7. பி.சா.ஆ.5 உயில் சாசனமானது முழுக்க முழுக்க என்னால் உருவாக்கப்பப்பட்ட ஆவணம் என்றாலும், அதனை வழக்கு தாக்கல் செய்யும் வரை யாரிடமும் காண்பிக்கவில்லை என்றாலும் சரியல்ல. உயில் சாசனம் ஏற்பட்ட காலத்தில் என் தந்தை நல்ல ஆரோக்கியத்துடனும், நல்ல மனநிலையுடனும் இருந்தார் என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.5 உயில் சாசனத்தில் கடன் பற்றி எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் தந்தை கடன் வாங்கிய ஆவணம் அனைத்தும் அவர் பராமரிக்கும் பெட்டியில் பூட்டி வைக்கப்பட்டிருந்தது என்றாலும், அவர் இறந்தபிறகு அந்த பெட்டியை திறந்து பார்த்தபிறகுதான் அவர் யாரிடம் கடன் வாங்கியிருந்தார் என்ற விஷயம் எங்களுக்கு தெரியவந்தது என்றால் சரிதான்.

8. பி.சா.ஆ.7 முதல் பி.சா.ஆ.9 வரையிலான பாண்டில் உள்ள கடன்கள் என் தந்தை உயிருடன் இருக்கும்போதே அவரால் பைசல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த கடன்களை என் தந்தை பைசல் செய்துவிட்டதால்தான் அசல் பாண்டுகள் என் தந்தை வசம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக ஒரு கடனை பைசல் செய்தால்தான் அந்த கடனுக்காக ஏற்பட்ட அசல் பாண்டினை கொடுப்பது வழக்கம் என்று சொன்னால் சரிதான். அசல் பாண்டு கடன் கொடுப்பவரிடம்தான் இருக்கும் என்றாலும், கடன் வாங்கியவரிடம் இருக்காது என்றால் சரியல்ல, எங்கள் வழக்கப்படி இரண்டு பாண்டுகள் எழுதப்பட்டதால் என் தந்தையிடம் இருந்தது. பாண்டின் காலக்கெடு 3 ஆண்டுகள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பாண்டில் 02.07.2009-ல் காலக்கெடு கடந்து பைசல் செய்ததாக என்னால் மோசடியாக எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

9. பி.சா.ஆ.7 முதல் பி.சா.ஆ.9 வரையிலான பாண்டுகளில் உள்ள கடன்களை எவ்வகையில் பைசல் செய்தீர்கள் என்றால் நான் சம்பாதித்த பணம், என் மனைவி சம்பாதித்த பணம் மற்றும் வங்கியில் ரூ.13 லட்சம் கடன் வாங்கி செலுத்தினேன். கடன் தொகை மொத்தமே ரூ.51,000/-என்றாலும், நான் ரூ.13 லட்சம் கடன் வாங்கியதாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.7 முதல் பி.சா.ஆ.9 கடனுக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், அவை என்றால் உருவாக்கப்பட்டு

இவ்வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

10. பி.சா.ஆ.10 கடனானது குடும்ப செலவிற்காக வாங்கப்பட்டது. அந்த சமயம் எனக்கு திருமணம் ஆகவில்லை. பி.சா.ஆ.10 ஆவணத்தில் எனது கடன்களை பைசல் செய்வதற்காக வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றாலும், அந்த கடனிற்கும் பொது குடும்பத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.10 மற்றும் பி.சா.ஆ.11 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து குறித்து எனது பெரியப்பா ஏற்கனவே ஆரணி சார்பு நீதிமன்றத்தில் OS.No. 05/1983 வழக்கு தாக்கல் செய்த விஷயம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கானது அப்புபிள்ளைக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்பேரில் A.S.No. 344/1989 என சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பேரில் அப்புபிள்ளை Revision மனு தாக்கல் செய்து அந்த மனுவானது 77/2002 Revision Bench-ஆல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

11. அந்த வழக்கில் என் தந்தை எனக்கு எழுதி வைத்த உயில் சாசனம் பற்றி சொன்னீர்களா என்றால் சொல்லவில்லை, அதற்குள் தள்ளுபடி ஆகிவிட்டது. என் தந்தையினை வைத்து என்னால் உயில் சாசனம் எழுதிக்கொண்டதால் அதனைப்பற்றி முன் வழக்குகளில் சொல்லாமல் மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் வாதிக்கும் பாக உரிமை உள்ளது என்றாலும், அதனை பிரித்து கொடுக்க எனக்கு கடமை உள்ளது என்றாலும் சரியல்ல.

12. வாதி குடும்பத்தில் மூத்தவர் என்பதால் அவரும் குடும்பத்தை பராமரித்து வந்தார் என்றாலும், நான் மட்டுமே குடும்பத்தை பராமரித்து வந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் தந்தைக்கு வாதி மற்ற பிரதிவாதிகள் சேர்ந்து சவரட்சணை செய்தார்கள் என்றாலும் சரியல்ல. வாதியும் 7-ம் பிரதிவாதிக்கு தங்க நகைகள் வாங்கி கொடுத்து சவரட்சணை செய்தார் என்றால் சரியல்ல. வாதிக்கு நான் திருமணம் செய்து வைத்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும், என் தந்தைதான் வாதிக்கு திருமணம் செய்து வைத்தார் என்றாலும் சரியல்ல. வாதி அனைத்து

சகோதரிகளுக்கு திருமணம் செய்து கொடுத்ததால் அவர் 40 வயதில் திருமணம் செய்துகொண்டார் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதித்து தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

திரு. பரணிதரன்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.01 12:31:20 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**